## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 115/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : சசிக்குமார் | Calling | : |
| Father/Husband's Name | : நாகராஜன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd October 2025.

1,2 ம் எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சின்னியம்பாளையத்தில் வசித்து கொண்டு RD கல்லூாிக்கு பின்புறம் உள்ள பெருமாள் கோவிலில் அர்ச்சராக பணிபுரிகிறேன். அ.சா.1 சரவணமாணிக்கம் ஈஸ்வரன் கோவிலில் அர்ச்சராக உள்ளார். கடந்த 13.10.2021 ம் தேதியன்று காலை 9.30 மணிக்கு கோவிலுக்கு சென்று கொண்டிருந்தேன். என்னை இடிப்பது போல ஒரு கருப்பு கலர் யமாகா வண்டி வேகமாக வந்தது. அப்போது ஈஸ்வரன் கோவில் அர்ச்சகர் சரவணமாணிக்கம் திருடன், திருடன் என்றே சத்தம் போட்டு கொண்டே வந்தார். என்னவென்று கேட்டபோது தன்னை தாக்கிவிட்டு செயினை அறுத்து கொண்டு சென்றததாக சொன்னார். ஆஜர் எதிரிகளை பார்த்தால் அவர்கள் அன்று என்மீது பைக்கை மோதுவதுபோல் சென்றவர்கள் போல தெரிகிறது. நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு சென்றேன். ஆனால் அந்த நபர்கள் வேகமாக சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 சரவணமாணிக்கம் எனக்கு நெருங்கிய நண்பரா அல்லது உறவினரா என்றால் அவர் அருகில் ஈஸ்வரன் கோவில் அர்ச்சகர், நன்கு பழக்கமானாவர். காவல்நிலையத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும், அ.சா.1 சரவணமாணிக்கமும் சென்றோம். காவல்நிலையத்தில் புகாரை யார்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.23 18:37:13 +0530

எழுதினார்கள் என்றால் அ.சா.1 தான் எழுதினார். புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். வேறு எந்த ஆவணத்திலும் கையெழுத்து போடவில்லை. நகையை திருடி சென்றததாக சொல்லும் நபர்களின் அங்க அடையாளங்களை நான் பார்த்தேனா என்றால் தூரத்தில் இருந்து தான் பார்க்க முடிந்தது. காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீஸார் சொன்னதின் அடிப்படையில் தான் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், இந்த வழக்கு சொத்து எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.23 18:37:19 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 115/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணமாணிக்கம் | Calling | : |
| Father/Husband's Name | : சண்முகசுப்பிரமணியம் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd October 2025.

1,2 ம் எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நஞ்சை ஊத்துக்குளியில் வசித்து கொண்டு வல்லால் ஈஸ்வரன் கோவிலில் அர்ச்சராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.10.2021 ம் தேதியன்று காலை 9.00 மணியளவில் நான் கோவிலில் இருந்தேன். அப்போது சாமிக்கு பூஜை செய்ய தீர்த்த குடம் எடுத்து கொண்டு இருந்தேன். அப்போது திதி கொடுக்கவேண்டும் என்று சொல்லி 2 நபர்கள் வந்து என்னிடம் கேட்டார்கள். தற்பொழுது ஆட்கள் இல்லை ஏற்பாடு செய்துவிட்டு 2 நாட்களுக்குள் சொல்வதாக சொன்னேன். மேற்படி ஆஜர் எதிரிகள் தான் கோவிலுக்கு வந்து என்னிடம் திதி கொடுப்பதற்காக கேட்டவர்கள் ஆவார்கள்.

2. மேற்படி இரண்டு நபர்களில் ஒருவர் எனது கையை பின்னால் பிடித்து கொண்டார். மற்றொரு நபர் கைகளால் எனது கன்னத்தில் குத்தி நான் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க செயினை என் கழுத்தில் இருந்து பறித்து கொண்டு சென்றுவிட்டார்கள். நான் கோவிலில் இருந்து வெளியே வருவதற்குள் பைக்கில் ஏறி சென்றுவிட்டார்கள். நான் திருடன் திருடன் என்று சத்தம் போட்டு கொண்டு வெளியில் வந்தேன். அருகில் இருந்த 2 கோவிலில் இருந்து அர்ச்சர்கள் என் சத்தம் கேட்டு வந்தார்கள். அவர்களும் எதிரிகளை துரத்தி கொண்டு சென்றார்கள். இதுசம்பந்தமாக தர்மகர்த்தாவுக்கு தகவல்

VIJAYAKUMAR K    Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.23 18:37:25 +0530

கொடுத்துவிட்டு மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் 2 மாதம் கழித்து மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் இருந்து என்னை போன் மூலம் அழைத்தார்கள். மேற்படி என்னிடம் பறித்த சென்ற செயினை அடையாளம் காட்டுமாறு சொல்லி நான் அடையாளம் காட்டினேன். அப்போது மேற்படி எதிரிகள் காவல்நிலையத்தில் இருந்தார்கள். அவர்கள் தான் என் செயினை பறித்து சென்றவர்கள் என்று சொன்னேன். பின்னர் மேற்படி என்னுடைய செயினை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் மனு தாக்கல் செய்த பெற்றுக்கொண்ட செயின் ஆகும். **அது அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது உறவினரிடம் நான் நடந்த விபரத்தை சொல்லி அவர் எழுதினார். எனக்கு கன்னத்தில் குத்தி வலி இருந்ததால் என்னால் எழுதமுடியவில்லை. புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரத்தை எனக்கு சொன்னார்கள். நான் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சம்பவ நடந்த அன்றே மாலை புகார் கொடுத்ததால் எனக்கு தேதி குறிப்பிட்டேனா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் இருந்து செயினை திருடி சென்ற நபர்களின் அங்க அடையாளங்களை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் 30 வயதுக்குள் இருக்கும் என்று சொன்னேன்.

2. எதிரிகளின் பெயர், முகவரி ஆகியவைகளை போலீஸார் என்னிடம் சொன்னதின் அடிப்படையில் தான் சொன்னேனா என்றால் சரிதான். என்னுடைய செயினின் குறிப்பிட்ட அடையாளம் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் செயின் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன்.நான் செயின் என்பதை காட்ட நகை வாங்கிய இரசீதினை போலீஸாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் நான் எத்தனை வெள்ளை தாளில் கையொப்பம் போட்டேன் என்றால் அப்படி எனக்கு தெரியவில்லை. கோவிலில் இருந்து மொடக்குறிச்சி காவல்நிலையம் வருவதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் அரைமணி நேரம் ஆகும்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.23 18:37:31 +0530

3. போலீஸார் சொன்னதின் அடிப்படையில் தான் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், இந்த வழக்கு சொத்து எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.23 18:37:37 +0530